இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 10.06.2026

# இரண்டு கட்சிகள் இருவேறு காட்சிகள்!

தங்களது இயக்கத்தை நோக்கி வருகிறவர்களை தி.மு.க.வும் த.வெ.க.வும் எப்படி நடத்துகிறது என்பதற்கு கடந்த இரண்டு நாட்களாக நடக்கும் நிகழ்வுகளே சாட்சியங்கள் ஆகும்.

அறிவாலயத்துக்கு வருகிறவர்கள் சுயமரியாதையுடன் நடத்தப்பட்டு தலைவரால் வரவேற்கப் படுகிறார்கள். த.வெ.க.வுக்குச் செல்கிறவர்கள் பனையூர் கட்சி அலுவலக வாசலில் மணிக்கணக்காக காத்திருக்க வைக்கப்படுகிறார்கள்.

தி.மு.க.வில் இயக்கத்தின் தலைவர் வருகை தந்து வரவேற்கிறார். இது தன்னைப் போலவே ஒவ்வொருவரையும் கழகத்துக்கு முக்கியம் என்று நினைப்பவராக தலைவர் இருப்பதைக் காட்டுகிறது. த.வெ.க. தலைவர் இவர் எவரையும் பார்ப்பது இல்லை. பார்த்தால் அவரது அழகு குறைந்து போகும். எவரையும் பார்ப்பது இல்லை.

**அ.தி.மு.க.வில் இருந்து நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் குதிரை பேரத்தால் பதவி விலகினார்கள். பதவி விலகிய உடனே த.வெ.க.வில் இணைந்தார்கள். அவர்கள் கூட, அக்கட்சியின் தலைவர் முன்னிலையில் சேரவில்லை. அவர் பாணியில் சொல்வதாக இருந்தால், 'அல்லுசில்லுகள்' முன்னிலையில்தான் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். எம்.எல்.ஏ.க்கள் கதியே இதுவாக இருக்கும் போது முன்னாள் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்களை விஜய் எப்படி மதிப்பார்?**

அ.தி.மு.க.வில் இருந்து விலகிய முன்னாள் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் கடந்த 6 ஆம் தேதியன்று காலை 10 மணிக்கு த.வெ.க. தலைமை அலுவலகத்துக்கு வரவும், முதலமைச்சர் விஜய் முன்னிலையில் கட்சியில் சேரலாம் என்று அறிவிக்கப்பட்டது. 9 மணியில் இருந்தே பலரும் வரத் தொடங்கி விட்டார்கள். ஆனால் 11 மணி வரை த.வெ.க. அலுவலக வாசல் கதவு திறக்கப்படவே இல்லை. எனவே ஒன்றரை மணிநேரமாக பலரும் பனையூர் வாசலில் வெயிலில் காத்துக் கிடந்தார்கள். இவர்களோடு அவர்களது ஆதரவாளர்களும் வந்திருந்ததால், வெட்கமாகப் போய்விட்டது. பின்னர் பின் பக்கக் கதவு மட்டும் திறக்கப்பட்டுள்ளது. அனைவரும் ஒரே நேரத்தில் உள்ளே நுழைந்ததால் தள்ளுமுள்ளு ஏற்பட்டுள்ளது.

**விஜய் வருவார் என்று எதிர்பார்த்தவர்களுக்கும் ஏமாற்றமே. அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் மட்டுமே இருந்து முன்னாள் அமைச்சர்களை உட்கார வைத்து போட்டோ எடுத்துள்ளார். தற்குறிகள் கூட்டத்துக்குள் போனால் இந்த மரியாதைதான் கிடைக்கும். சுயமரியாதை கிடைக்காது. அதற்கும் அவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.**

தி.மு.க.வில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த, செய்யூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த பனையூர் பாபு இணைந்துள்ளார். செங்கல்பட்டைச் சேர்ந்த அ.தி.மு.க. வேட்பாளர் கஜேந்திரன் இணைந்தார். இவர்கள் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தான் இணைந்தார்கள். அறிவாலயம் கலைஞர் அரங்கம் அவர்களுக்காக விழாக்கோலம் பூண்டு இருந்தது. முக்கியமானவர்கள் மட்டுமல்ல, அவர்களோடு இணைய வந்தவர்களும் நாற்காலியில் அமர வைக்கப்பட்டு மதிக்கப்பட்டார்கள். என்ன நோக்கத்துக்காக தி.மு.க.வில் இணைகிறோம் என்று அவர்களுக்குப் பேச வாய்ப்பு தரப்பட்டது. தலைவருடனும், எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதி அவர்களுடனும் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். மனநிறைவோடு தங்களை அவர்கள் தி.மு.க.வில் இணைத்துக் கொண்ட மகிழ்ச்சியோடு திரும்பி இருக்கிறார்கள்.

**ஒருவர் கட்சி தொடங்கலாம். எல்லாக் கட்சியும் தி.மு.க. ஆகிவிட முடியாது. சுயமரியாதைக்காக உருவாக்கப்பட்ட இயக்கம் இது. அப்படித்தான் அனைவரையும் நடத்தும். சினிமா புகழால் கட்சியைத் தொடங்கி, படத்தை ஓட்டும் புரமோஷன் மாதிரியே கட்சியையும் தேர்தலையும் நடத்தி, அப்போதும் தனிப்பெரும் செல்வாக்கை அடைய முடியாமல், தனது கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டு வென்றவர்களின் ஆதரவைப் பெற்றே முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்து உள்ள விஜய்க்கு, மக்களைப் பற்றிய மரியாதை எப்படி இருக்கும்?**

அ.தி.மு.க.வில் வெற்றி பெற்று வந்தவர்களுக்கு அமைச்சர் பதவியைத் தருகிறேன், வாரியம் தருகிறேன் என்று ஆசை வார்த்தைக் கூறி இழுத்து, தனது ஆட்சிக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்து, பின்னர் அமைச்சர் பதவி கிடையாது என்று ஏமாற்றி துரத்தி விட்டவர்தான் விஜய். 'கொறடா உத்தரவை மீறி வாக்களித்தால் பதவி போய்விடும்' என்று தெரிந்தே பட்டப்பகலில் ஏமாற்றப்பட்டார்கள் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்.

**இப்போதும் அப்படித்தான் விஜய் முன்னால் சேரப் போகிறோம் என்று வரவழைக்கப்பட்டார்கள் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள். ஏமாற்றப்பட்டுள்ளார்கள். நம்ப வைத்து ஏமாற்றுவதில் வல்லவர் அவர். ஏழு மணிநேரமாக வருகிறேன், வருகிறேன் என்று சொல்லி ஏமாற்றி 41 உயிர்கள் பலியாகக் காரணமானவர் அல்லவா அவர்? அவருக்கு இதெல்லாம் பெரிய காரியமா?**

கரூரில் தன்னைப் பார்க்க வந்த 41 உயிர்கள் செப்டம்பர் 27 (2025) பலியானதைத் தொடர்ந்து அவர்கள் வீட்டுக்குப் போய் ஆறுதல் சொல்லப் போகாத விஜய், டிசம்பர் 27 அன்று மலேசியா சென்று தனது படத்தின் இசை வெளியீட்டு விழாவில் ஆடிக் கொண்டு இருந்தார். எனவே, அவரிடம் இது போன்ற மாண்பை எதிர்பார்ப்பது தவறு.

**மே 10 அன்று அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அன்று பெண்கள் சிங்கப்படையை உருவாக்கப் போவதாகக் கையெழுத்துப் போட்டார். இன்று ஜீன் 8. இன்று வரை உருவாக்கவில்லை. மே 27 அன்று தொடங்கப் போவதாக அறிவிப்பு வந்தது. அன்று தொடங்கவில்லை. மே 29 தொடங்கப் போவதாக அறிவிப்பு வந்தது. மேடை எல்லாம் போட்டார்கள். ஆனால் முதலமைச்சர் செல்லவில்லை. தனது மேனேஜர் வீடு திறப்பு விழாவுக்கு பட்டுவேட்டி கட்டிச் சென்று விட்டார். அவருக்கு எது முக்கியம் என்று அவருக்குத் தானே தெரியும்?**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (8.6.2026) தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா தனது பேத்தி எம்.சமீனா சப்ரியத் – எஸ்.ஹனீப் கான் ஆகியோரின் திருமண விழா அழைப்பிதழை தனது துணைவியார் மற்றும் குடும்பத்தினருடன் சந்தித்து வழங்கினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.







`ராப்' இசைப் பாடகர் வேடன் நேற்று முன்தினம் (8.6.2026) தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். இச்சந்திப்பின்போது, அவருக்கு கழக இளைஞர் அணி சார்பில் வெளியிடப்பட்ட `காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு: தி.மு.க. 75' நூலையும், தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிலையையும் வழங்கி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தினார்.

### மும்மொழித் திட்டத்தைத் திணிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# ஆளுநர் மாளிகை அருகில் கழக மாணவர் அணியினர் ஆர்ப்பாட்டம்!

## ஜூன் 23ல் நடைபெறுகிறது; திருமதி ஜெ.வீரமணி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 10 - மும்மொழி திட்டத்தை திணிக்கும் பாசிச பா.ஜ.க.வை எதிர்த்தும் VBSA மசோதாவை திரும்ப பெற கோரியம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களது ஆலோசனைப்படியும், தி.மு.கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது வழி நின்றும்,

தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 23.06.2026, காலை 10 மணியளவில் ஆளுநர் மாளிகை அருகில் நடைபெறவுள்ளது.

இது குறித்து மாணவர் அணிச் செயலாளர் திருமதி ஈரோடு ஜெ.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பி.எம்.ஸ்ரீ மாடல் பள்ளி திட்டத்தை நெத்தி பொட்டில் அடித்தது போல் திட்ட வட்டமாக நிராகரித்தார்.

தற்போது கடந்த மே 15ம் தேதி ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் ஜூலை 1ஆம் தேதி முதல் 9ம் வகுப்பில் மும்மொழியை கட்டாயமாக்கியுள்ளது.

த.வெ.க. ஆட்சி அமைத்த போது கல்வி அமைச்சர் ராஜ்மோகன் மும்மொழி திட்டத்தை ஏற்க மாட்டோம் என்றார், பின்னர் எம்.ஸ்ரீ திட்டத்தை பரிசீலிப்போம் என்றும் கூறியுள்ளார்.

எதற்காக இந்த முரண்பாடு? த.வெ.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான விஜய் அவர்கள் அமைதி காப்பது ஏன்?

தங்களின் கொள்கை எதிரியான பாசிச பா.ஜ.க.விடம் கல்வியை அடகு வைக்க துணிந்து விட்டதா த.வெ.க. அரசு?

மாணவர்களின் வாழ்க்கையை சீரழிக்கும் இத்திட்டத்தை பரிசீலிக்க இன்னும் எத்தனை நாட்கள் கால அவகாசம் எடுத்துக் கொள்ளப் போகிறது இந்த சோபா மாடல் த.வெ.க. அரசு?

பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் உருது போன்ற மொழிகளைப் படிக்கலாம் என்று சொல்வார்களே தவிர, இந்த மொழிகளை கற்பிக்க ஆசிரியர்களே இல்லை.

சமஸ்கிருதம் மட்டுமே (only option) படிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டு உங்களது விருப்பப்பாடம் என மக்களை ஏமாற்றும் திட்டமே சி.பி.எஸ்.இ. 9ஆம் வகுப்பு மும்மொழித் திட்டம்.

கடந்த 10 ஆண்டுகளில் ரூபாய் 2532 கோடி சமஸ்கிருதத்தை கற்பிப்பதற்கு நிதி ஒதுக்கி அனைத்து ஏற்பாடுகளையும் தயார் நிலையில் வைத்திருக்கும் பாஜகவின் Silent Mission இது என மக்களிடையே அறிய செய்வோம்.

இதுகுறித்து த.வெ.க. அரசு வாய் திறக்காமல் மௌனம் காக்கிறது.

ஒன்றிய அரசின் 'விக்சித் பாரத் சிக்ஷா அதிஷ்தான் (VBSA) மசோதா, 2025'ஐ பரிசீலிக்க அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மசோதா முற்றிலும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது, அதை உடனடியாக மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும்.

இந்த மசோதாவின் கீழ் மூன்று புதிய கவுன்சில்கள் உருவாக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

1. ஒழுங்குமுறை கவுன்சில்
2. அங்கீகார கவுன்சில்
3. தரக்கட்டுப்பாட்டு கவுன்சில்

பல்கலைக்கழகங்களின் தரத்தை ஒருங்கிணைத்து நிர்ணயம் செய்வோம் என்று கூறிக்கொண்டு, NEET போல முகமூடி அணிந்து பல்கலைக்கழகங்களை முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் எடுக்கும் வழிவகை செய்து, தேவைப்பட்டால் பல்கலைக்கழகங்களை மூடிவிடும் அதிகாரத்தையும் வழங்குகிறது" இந்த VBSA மசோதா.

மேலும், "இந்த மசோதா தவறான முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 7வது அட்டவணையில் உள்ள பட்டியல் 1ன் நுழைவு 66 (Entry 66 of List 1)ஐப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லாத ஒரு சட்டத்தை இயற்ற ஒன்றிய பாசிச பாஜக அரசு முயல்கிறது..

குறிப்பாக தமிழ்நாடு போன்ற மாநிலங்களில், சமூக நீதியை நிலை நாட்டும் நோக்கிலேயே அரசுப் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் நிறுவப்பட்டன.

மாநில அரசின்

1. இட ஒதுக்கீடு கொள்கை,
2. மிகக் குறைந்த கட்டணம் மற்றும்
3. பெண்கல்விக்கான சிறப்புத் திட்டங்கள்

ஆகியவைதான் இங்கு உயர்கல்வியை அனைவருக்கும் சாத்தியமாக்கியுள்ளன.

பொதுக் கல்வி மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்கான மாநில தளம் (Save Public Education and Culture in Society Tamil Nadu அல்லது SPCSSTN) என்ற அனைவருக்கும் சமமான, தரமான, மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி முறையை வலியுறுத்தும் ஒரு முக்கிய கல்விசார் அமைப்பு இந்த மசோதாவை அமெரிக்காவின் மெக்கார்த்தியிசத்தின் (Mc Carthyism) இந்திய வடிவம் என்று விமர்சித்துள்ளது.

மேலும் பட்டப் படிப்பு படிக்கும் போதே தொழிற்கல்வி பழகுவது மற்றும் இந்திய அறிவுசார் அமைப்புகளுக்கு (Indian Knowledge Systems) முக்கியத்துவம் அளிப்பது போன்ற திட்டங்கள், தற்போதைய அதிகார வர்க்கத்திற்கு அடிபணிந்து நடக்கும் ஒரு குறிப்பிட்ட சித்தாந்தக் கூட்டத்தை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

எனவே இந்தத் திட்டத்தை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும் என்று தி.மு.க. மாணவர் அணி சார்பாக வலியுறுத்துகிறோம்.

இதை வலியுறுத்தி வருகிற 23 ஆம் தேதி காலை 10 மணியளவில் ஆளுநர் மாளிகை அருகே, கழக மாணவர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



திருச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவரங்கத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில் ரூபாய் 5 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், மத்திய மாவட்ட பொருளாளர் துரைராஜ், திருவரங்கம் ரங்கா, பகுதிச் செயலாளர் ஏ.எஸ்.மணி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.